

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2024) சென்னையில் நடைபெற்ற, சென்னை உயர்நீதிமன்ற பார் அசோசியேஷன் தலைவர் எம். பாஸ்கர் அவர்களின் மகன் அபினாஷ் – சரஸ்வதி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (ஒருங்கிணைப்பு) செ. இரவிந்திரன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

# சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் "காலம் கடந்த கலைஞர்" கண்காட்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டார்!

*சென்னை ஜூன் 11 -*

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் நிறைவு விழா மற்றும் கலைஞர் 101வது பிறந்தநாள் விழாவையொட்டி காலம் கடந்த கலைஞர் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இக்கண்காட்சியினை தினமும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் நேரில் சென்று பார்வையிட்டு கண்டு களித்து வருகின்றனர்.

இந்நிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் காலம் கடந்த கலைஞர் கண்காட்சியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

கண்காட்சியில் முத்தமிழர் அறிஞர் கலைஞரின் வாழ்க்கை வரலாறுகள், அரசியல் நிகழ்வுகள், திரைத்துறையில் கலைஞர் ஆற்றிய பல்வேறு சாதனைகளும், அவரின் பல்வேறு படைப்புகளும், கலைஞர் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த பல்வேறு திட்டங்கள் கண்காட்சியில் இடம்பெற்று இருந்ததைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் பார்வையிட்டார். மேலும் அதிநவீன தொழில்நுட்பங்கள் மூலம் அமைக்கப்பட்டிருந்த இளமைப் பருவ கலைஞரைவணங்கி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறுகையில் "காலம் கடந்த கலைஞர்" கண்காட்சியை கண்டுக்களித்தோம், மனம் மகிழ்ந்தோம் அதிநவீன தொழில்நுட்பங்கள் மூலம் இளமை பருவ கலைஞரை அருகில் காணும் வாய்ப்பு, தலைவர் கலைஞரை கண்டாலே புது உற்சாகமும், உத்வேகமும் கிடைக்கிறது, தலைவர் கலைஞர் தளபதி உருவில் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தொடர்ந்து கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் வருகை புத்தகத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கையெழுத்திட்டார்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

*நீலகிரி, ஜூன் 11 -*

நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (11.6.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.



இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**பொருள்:**

1. ஜூன்14 கோவையில் நடைபெறும் "முப்பெரும் விழா" நிகழ்ச்சி குறித்து.
2. நாடாளுமன்றத் தேர்தல் 40/40 வெற்றி நீலகிரி மாவட்டத்தில் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சிகள் குறித்து.
3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் கேட்டுக்கொண்டுள்ளார்.





